RNI-NO: TNTAM/2021/83936




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

www.malaithanthi.in

மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 158 | ஜுன்.15 2026 திங்கள்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

# இந்தியாவில் மலிவு விலையில் சுகாதார வசதி; பிரதமர் மோடி பெருமிதம்

புதுடில்லி: ஜுன்.15-

அனைவருக்கும் மலிவு விலையில் சுகாதார வசதிகள் கிடைக்க இந்தியா பாடுபட்டு வருகிறது என பிரதமர் மோடி தெரிவித்தார்.

அவரது பதிவு: கடந்த 12 ஆண்டுகளாக, தரமான சுகாதார வசதிகளை மலிவு விலையிலும் அனைவருக்கும் எளிதில் கிடைக்கக்கூடியதாகவும் மாற்றுவதற்கு இந்தியா பாடுபட்டு வருகிறது. மிகவும் நலிவடைந்த மக்களுக்கு உயர்தர சுகாதார சேவைகளை வழங்கும் உலகின் மிகப்பெரிய சுகாதாரத் திட்டமான ஆயுஷ்மான் பாரத் திட்டத்தை அறிமுகம் செய்ததில் நாங்கள் பெருமிதம் கொள்கிறோம்.

பிரதம மந்திரி பாரதிய ஜன் ஔஷதி பரியோஜனா போன்ற பிற முயற்சிகள் மருந்துகளின் விலையைக் குறைத்துள்ளன. ஸ்டென்ட்கள் மற்றும் முழங்கால் மாற்று அறுவை சிகிச்சைகளின் விலைகள் கட்டுப்படியாகக்கூடியதாக மாறியுள்ளன, இது பலருக்கு உதவியுள்ளது. அதே நேரத்தில் மருத்துவக் கல்வி மக்களுக்கு எளிதில் கிடைக்கக்கூடியதாக மாறியுள்ளது. வளர்ச்சி அடைந்த இந்தியாவை உருவாக்குவதற்கு, இதுவரை நாம் அடைந்துள்ள வளர்ச்சி தொடந்து முன்னேற்றம் அடையும்.இவ்வாறு பிரதமர் மோடி கூறியுள்ளார்.





## புதுச்சேரி சட்டப்பேரவை கூடுவது எப்போது? : முதல்வர் ரங்கசாமி பதில்

புதுச்சேரி: ஜுன்.15-

மீன்பிடி தடைக் காலம் முடிந்து கடலுக்கு மீனவர்கள் புறப்பட்டதையடுத்து அவர்களை வழியனுப்பி வைத்தபோது, புதுச்சேரி சட்டப்பேரவை எப்போதும் கூடும் என்ற கேள்விக்கு முதல்வர் ரங்கசாமி பதிலளித்தார்.

மத்திய அரசின் உத்தரவுப்படி இந்த ஆண்டுக்கான மீன்பிடி தடைக்காலம் கடந்த ஏப்ரல் 15ம் தேதி தொடங்கியது. புதுச்சேரியில் கனகசெட்டிகுளம் முதல் மூர்த்திக்குப்பம் வரையிலும், காரைக்காலில் மண்டபத்தூர் முதல் வாஞ்சூர் வரையிலும் உள்ள அனைத்து மீனவ கிராமங்களிலும் படகுகள் துறைமுகத்தில் நிறுத்தப்பட்டன.

தடை காலத்தை பயன்படுத்தி மீனவர்கள் தங்கள் படகுகள், வலைகளை சீரமைத்து பராமரிப்பு பணிகளை மேற்கொண்டனர். 60 நாட்கள் தடைக்காலம் இன்று ஞாயிற்றுக்கிழமையுடன் முடிவடைந்ததை தொடர்ந்து, தேங்காய்திட்டு துறைமுகத்தில் ஆழ்கடல் மீன்பிடிக்கச் செல்லும் 144 விசைப்படகுகளை தயார் செய்யும் பணி மும்மரமாக நடைபெற்றது.

இங்கு 120 படகுகளில் 80க்கும் மேற்பட்ட படகுகள் இன்று கடலுக்குச் சென்றன. மற்ற படகுகள் அடுத்தடுத்த நாட்களில் கடலுக்குச் செல்லும் எனக் கூறப்படுகிறது.

மீனவர்கள் தங்கள் படகுகளில் போதிய அளவு ஐஸ்கட்டிகள், டீசலை ஏற்றி, நீண்ட நாட்களுக்கு பின் கடலுக்குச் செல்ல தயாராகினர். இதனைத் தொடர்ந்து தேங்காய்திட்டு மீன்பிடி துறைமுகத்தில் மீனவர்கள் கடலுக்குச் செல்லும் பணிகள் நடந்தது.

மீனவர்கள் புனித நீரை கடலில் ஊற்றியும், மலர் தூவியும் பூஜை செய்தும் வழிபட்டனர். தொடர்ந்து முதல்வர் ரங்கசாமி விசை படகுகளுக்கு மலர் தூவி கொடியசைத்து மீனவர்களை தொழிலுக்கு வழியனுப்பி வைத்தார்.

அதையடுத்து செய்தியாளர்களிடம் முதல்வர் ரங்கசாமி கூறுகையில்,'' வருகிற 17ம் தேதி அமைச்சரவை விரிவாக்கம் நடைபெறும். அமைச்சர்கள் பதவியேற்றவுடன் புதுச்சேரி சட்டப்பேரவை எப்போது கூடும் என தெரிவிக்கப்படும். சட்டப்பேரவையை கூட்ட ஆகஸ்ட் வரை காலமுள்ளது. கூட்டணிக் கட்சிகளுடன் கலந்து ஆலோசித்து நியமன எம்எல்ஏக்கள் பதவி குறித்து முடிவு எடுப்போம்'' என்றார்.

## கும்பகோணத்தை தனி மாவட்டமாக விரைவில் முதல்வர் அறிவிப்பார்: வேளாண் அமைச்சர்

கும்பகோணம்: ஜுன்.15-

தமிழக முதல்வர் கும்பகோணத்தை தனி மாவட்டமாக விரைவில் அறிவிப்பார் என வேளாண் அமைச்சர் வினோத் தெரிவித்தார்.



கும்பகோணத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட வேளாண்துறை அமைச்சர் வினோத் செய்தியாளர்களிடம் பேசுகையில், "2028ல் நடைபெற உள்ள மாசி மகாமக விழா தொடர்பாக அறநிலைத்துறை அமைச்சருடன் ஆலோசனை நடத்தி வருகின்றோம்.

இந்த விழாவுக்கு சுமார் 50 லட்சம் பக்தர்கள் வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் பல்வேறு திட்டங்கள் தேவையான வசதிகளை தற்போது தயாரித்து வருகிறோம்.

கும்பகோணத்தை தனி மாவட்டமாக அறிவிப்பதற்கான முயற்சி மேற்கொண்டு வருகிறோம். தமிழக முதல்வர் கும்பகோணத்தை தனி மாவட்டமாக விரைவில் அறிவிப்பார்.

நிறைவடையாத சுற்றுச்சாலையை குறித்து ஏராளமானோர் என்னிடம் மனு அளித்துள்ளனர். கடந்த ஆட்சி காலத்தில் என்னென்ன பிரச்சினை இருக்கின்றது என ஆய்வு மேற்கொள்ள அறிவித்துள்ளோம். மீதமுள்ள சுற்றுச்சாலை பகுதியும் விரைவில் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்,'' என்றார் அவர்.

## அரசுப் பள்ளிகளில் 700 மாணவர்களுக்கு 1 உடற்கல்வி ஆசிரியரா? : நயினார் நாகேந்திரன் கண்டனம்

சென்னை: ஜுன்.15-

"அரசுப் பள்ளிகளில் 250 மாணவர்களுக்கு 1 உடற்கல்வி ஆசிரியர் என்றிருந்த விகிதத்தை, 700 மாணவர்களுக்கு 1 ஆசிரியர் என மாற்றுமாறு, முந்தைய திமுக அரசு பிறப்பித்த அதே அரசாணையை தற்போதைய தவெக அரசும் முன்மொழிவதாக வெளியாகியுள்ள செய்திகள் கடும் அதிர்ச்சியளிக்கின்றன'' என தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்தார்.



இதுகுறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், "அரசுப் பள்ளி மாணவர்களின் மீது ஏவப்படும் அடக்குமுறை கடும் கண்டனத்திற்குரியது. அரசுப் பள்ளி மாணவர்களின் விளையாட்டு திறனை முடக்கும் நோக்கில், அரசுப் பள்ளிகளில் சுமார் 250 மாணவர்களுக்கு 1 உடற்கல்வி ஆசிரியர் என்றிருந்த விகிதத்தை, 700 மாணவர்களுக்கு 1 ஆசிரியர் என மாற்றுமாறு, முந்தைய திமுக அரசு பிறப்பித்த அதே அரசாணையை தற்போதைய தவெக அரசும் முன்மொழிவதாக வெளியாகியுள்ள செய்திகள் கடும் அதிர்ச்சியளிக்கின்றன.

அதிகளவிலான கட்டணம் செலுத்தி தனியாரிடம் ஸ்போர்ட்ஸ் கோச்சிங் செல்ல முடியாத அரசுப் பள்ளி மாணவர்களின் விளையாட்டு திறன்களைத் துல்லியமாகக் கணித்து, போட்டிகளில் அவர்களின் பங்கேற்றலை உறுதி செய்யும் உடற்கல்வி ஆசிரியர்களின் எண்ணிக்கையை அரசு குறைக்க நினைப்பது அப்பட்டமான அடக்குமுறை.

தவெக அரசின் இந்த தவறான அணுகுமுறையால், 700 மாணவர்களுக்கு கீழ் இருக்கும் சில கிராமப்புற பள்ளிகளின் மீது உடற்கல்வி ஆசிரியரின் நிழல் கூட படாமல் போய்விடும் என்பது எவ்வளவு பெரிய உரிமை மீறல்? இதுதான் தவெகவின் அனைவருக்குமான அரசியலா?.

கல்விக் கூடங்களில் மாணவர்களின் ஒழுக்கத்தை கண்காணிப்பதில் முக்கியப் பங்கு வகிக்கும் உடற்கல்வி ஆசிரியர்களின் எண்ணிக்கையில் அரசு சமரசம் செய்யக்கூடாது எனவும், பழைய நடைமுறையின் படியே உடற்கல்வி ஆசிரியர்களின் நியமனம் தொடர வேண்டும் எனவும் முதல்வர் விஜய்யை வலியுறுத்துகிறேன்'' எனத் தெரிவித்தார்.

## "தவெகவினர் தற்குறிகள் இல்லை அம்புக்குறிகள்" : ராகவா லாரன்ஸ்

சென்னை: ஜுன்.15-

"தவெக அரசின் ஒரு மாத கால செயல்பாடு மிகச் சிறப்பாக உள்ளது. புதிய அரசுக்கு கொஞ்சம் கால அவகாசம் கொடுக்க வேண்டும். இந்த ஆட்சியின் மீது சிலர் கடுமையான விமர்சனங்களை முன் வைக்க பொறாமைதான் காரணம். தவெகவினரை தற்குறிகள் என விமர்சனம் செய்கிறார்கள். ஆனால் அவர்கள் தற்குறிகள் இல்லை அம்புக்குறிகள்'' என நடிகர் ராகவா லாரன்ஸ் தெரிவித்துள்ளார்.



சென்னையில் செய்தியாளர்களை சந்தித்த நடிகர் ராகவா லாரன்ஸ், " அரசியலுக்கு வரலாமா, வேண்டாமா எனக் கேட்டு சமீபத்தில் ஒரு வீடியோ வெளியிட்டிருந்தேன். அதற்கு பதிலளித்துள்ளவர்கள், சின்னக் குழந்தைகள் முதல் முதியவர்கள் வரை என்னை அரசியலுக்கு வருமாறு உரிமையோடு அழைக்கின்றனர். நான் ஒரு முடிவை எடுத்துள்ளேன். விரைவில் என் ரசிகர்களை அழைத்து, மேடையில் என் தாயை அமரவைத்து, அந்த நல்ல முடிவை அறிவிக்க உள்ளேன்.

திருநங்கைகள் என்னைப் பார்க்க வந்துள்ளதாக சொன்னார்கள், ஆனால் இவ்வளவு பேர் இங்கே வந்துள்ளார்கள். நீங்கள் நினைத்தது நடக்கப்போகிறது. மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு. இதனால் தான் அரசியலுக்கு வரலாமா என மக்களிடம் கேட்டேன். அதில் என்ன தவறு. நான் இனி ஏதாவது பெரிய முடிவு எடுத்தால் மக்களிடம் கேட்டுத்தான் செயல்படுவேன்.

தவெக அரசின் ஒரு மாத கால செயல்பாடு மிகச் சிறப்பாக உள்ளது. கோயில்கள், பள்ளிகள் அருகில் இருந்த மதுக்கடைகளை மூடும் முடிவு எனக்கு மிகவும் பிடித்திருந்தது. கல்வித்துறை அமைச்சர், அறநிலையத்துறை அமைச்சரின் செயல்பாடுகள் நன்றாக உள்ளது. புதிய அரசுக்கு கொஞ்சம் கால அவகாசம் கொடுக்க வேண்டும்.

புது இடத்தில், ஒரு வாடகை வீட்டுக்குச் சென்றாலே அங்கு பழக ஒரு மாதம் ஆகும். அந்த வீட்டில் எது பிரச்சினை, அந்தத் தெருவில் உள்ள நாய்களை எப்படி நமக்குப் பழக்கப்படுத்துவது என்பதை தெரிந்து கொள்ளவே காலநேரம் தேவை.

ஒரு நாய்க்கோ, ஒரு வாடகை வீட்டுக்கோ நேரம் தேவை என்றால், புதிதாக ஆட்சிக்கு வந்தவர்களுக்கும் கால அவகாசம் கொடுப்பது நல்லது என நான் நினைக்கிறேன். இந்த ஆட்சி மீது சிலர் கடுமையான விமர்சனங்களை முன் வைக்க பொறாமைதான் காரணம். விமர்சனங்களை வைப்பதற்கு முன்பு, நாம் என்ன செய்தோம் என்று யோசனை செய்துவிட்டு விமர்சனம் வைத்தால் நன்றாக இருக்கும்.

திருச்சி கிழக்கில் போட்டியிடுகிறேனா என்பதை விரைவில் ரசிகர்கள் முன்பு அறிவிப்பேன். எல்லா கட்சிகளின் தலைவர்களும் எனக்கு நண்பர்கள் தான். அவர்களின் ஆசியை பெற்றே என் முடிவை அறிவிப்பேன்.

ரஜினியின் ஆசிர்வாதம் இல்லாமல் நான் எதையும் செய்வதில்லை. அவரின் ஆசியோடுதான் எல்லாவற்றையும் செய்வேன்.

அண்ணாமலை நன்றாக படித்தவர், அரசியல் புரிதல் உள்ளவர். அவரைப் போன்ற புதியவர்கள் அரசியலுக்கு வருவது நல்லதுதான்.

தவெகவினரை தற்குறி என விமர்சனம் செய்கிறார்கள். ஆனால் அவர்கள் தற்குறி இல்லை அம்புக்குறிகள். அவர்கள் கண்ணை மூடித் திறப்பதற்குள் தவெகவை வெற்றிபெற வைத்துவிட்டார்கள். மக்களுக்கு யார் நல்லவர்கள் கெட்டவர்கள் எனத் தெரியும். நான் மக்களுக்கு உண்மையாக இருப்பேன்.

நான் பணம் சம்பாதிக்கவோ, வெறுப்பு அரசியல் செய்யவோ அரசியலுக்கு வரமாட்டேன். இப்போது நூறு பேருக்கு உதவி செய்தால், அரசியலுக்கு வந்தால் லட்சம் பேருக்கு உதவி செய்வேன். பணம் முக்கியமில்லை, மனிதன் எப்படி வாழ்ந்தான், எப்படி மறைந்தான் என்பதே முக்கியம். நான் மறையும்போது இந்த ஊரே அழும்'' என்றார்.

present sale for all over Tamil Nadu

தற்பொழுது தமிழகமெங்கும் விற்பனையாகி வருகிறது

# பரந்தூர் விமான நிலையத் திட்டம் கைவிடப்படுகிறதா? சிப்காட் தொழிற்பூங்கா அமைக்க அரசு பரிசீலனை

சென்னை, ஜூன்.15–
காஞ்சி மாவட்டம் பரந்தூரில் அமையவிருந்த சென்னைக்கான 2வது சர்வதேச விமான நிலையத் திட்டப் பணிகள், தவெக ஆட்சிப் பொறுப்பேற்றதை தொடர்ந்து, நிலப் பத்திரப் பதிவு உள்ளிட்ட பூர்வாங்க பணிகள் தற்காலிகமாக நிறுத்திவைக்கப் பட்டுள்ளதாகத் தெரிகிறது.

பரந்தூர் விமான நிலையம் வருவதற்கான சாத்தியக் கூறுகள் பெருமளவு குறைந்துள்ள நிலையில், ஏற்கெனவே கையகப்படுத்தப்பட்ட நிலங்களில் சிப்காட் தொழிற் பூங்கா அமைப்பது குறித்து பரிசீலிக்கும்படி அரசு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப் பட்டுள்ளதாகத் தெரிகிறது.

பரந்தூர் பகுதியில் விமான நிலையம் வரும் என்று நம்பி ரியல் எஸ்டேட் நிறுவனங்கள் கோடிக்கணக்கில் முதலீடு செய்தன. பலர் நிலத்தை வாங்கி குவித்ததால் கடந்த ஓரிரு ஆண்டுகளில் நிலங்களின் மதிப்பு 10 மடங்கு உயர்ந்த நிலையில், தற்போது இந்த ரியல் எஸ்டேட் வணிகம் கடும் சரிவைச் சந்திக்கத் தொடங்கியுள்ளது.

முந்தைய ஆட்சியின் போது, பரந்தூர் பசுமை வழி விமான நிலையத் திட்டத்துக்காக 5,746 ஏக்கர் நிலம் அடையாளம் காணப்பட்டது. அதில் முதற்கட்டமாக, ஏறத்தாழ 1,700 ஏக்கர் நிலம் நில உரிமையாளர்களின் சம்மதத்துடன் நேரடியாகக் கையகப்படுத்தப்பட்டது.

தற்போது தமிழகத்தில் தவெக தலைமையிலான புதிய அரசு அமைந்துள்ளது. முன்னதாக, இந்த விமான நிலையத் திட்டத்தை எதிர்த்து முதல்வர் விஜய் போராட்டத்தை நடத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில், இத்திட்டம் தற்போது மறு பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. ஏற்கெனவே கையகப் படுத்தப்பட்ட 1,700 ஏக்கர் நிலத்தை மீண்டும் விவசாயிகளிடம் ஒப் படைப்பதில் சில நடைமுறைச் சிக்கல்கள் இருப்பதால், அந்த நிலப் பரப்பில் புதிய சிப்காட் தொழிற் பூங்காவை அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் குறித்து அரசுத் தரப்பில் தீவிர மாகப் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.




விமான நிலையம் வருவதற்கான சாத்தியக் கூறுகள் குறைந்துள்ள நிலையில், ஏகனாபுரம் மற்றும் சுற்று வட்டார கிராம மக்கள் நீண்ட நாட்களுக்குப் பிறகு நிம்மதிப் பெரு மூச்சு விட்டுள்ளனர். இது குறித்துப் போராட்டக் குழுவினரிடம் கேட்டபோது, "தேர்தல் பிரச்சாரத்தின் போது, பரந்தூர் விமான நிலையத் திட்டம் கைவிடப்படும் என்று தற்போதைய முதல்வர் அறிவித்திருந்தார். தற்போது அவர் தலைமையிலான அரசு பொறுப் பேற்றுள்ளதால், இந்தத் திட்டம் நிச்சயமாக வராது என்ற நம்பிக்கை எங்களுக்கு ஏற்பட்டுள்ளது" என்றனர்.

பரந்தூரில் சர்வதேச விமான நிலையம் அமையும் என்ற அதிகாரப் பூர்வ அறிவிப்பு வெளியானவுடன். ஸ்ரீபெரும்புதூர், சுங்குவார் சத்திரம் மற்றும் பரந்தூர் சுற்று வட்டாரப் பகுதிகளில் நிலத்தின் மதிப்பு பல மடங்கு உயர்ந்தது. சென்னை மற்றும் வெளி மாவட்டங்களைச் சேர்ந்த முன்னணி ரியல் எஸ்டேட் நிறுவனங்கள், எதிர்காலத்தில் பெரும் லாபம் பார்க்கலாம் என்ற நோக்கில், அங்குள்ள விளை நிலங்களையும் சுற்றியுள்ள இடங்களையும் போட்டிப் போட்டுக்கொண்டு வாங்கிக் குவித்தன.

ஆனால், இப்போது விமான நிலையம் வருவதற்கான வாய்ப்புகள் மங்கி, சிப்காட் தொழிற் பூங்கா வரக்கூடும் என்ற தகவல் பரவியதால், அப்பகுதியில் நிலத்தின் விலை வேகமாகச் சரியத் தொடங்கியுள்ளது. வாங்கிய நிலங்களை அவசரமாக விற்க முடியாமலும், புதிய வாடிக்கையாளர்கள் யாரும் நிலம் வாங்க முன் வராததாலும் இப்பகுதியில் ரியல் எஸ்டேட் வர்த்தகம் பெருமளவு முடங்கியுள்ளது.

மாநிலத்தின் தொழில் வளர்ச்சிக்கு இரண்டாவது விமான நிலையம் அவசியம் என்று ஒரு தரப்பு நிபுணர்கள் வாதிட்டாலும், இந்தத் திட்டம் கைவிடப் படுவதற்கான வாய்ப்புகளே தற்போது அதிகமாக நிலவுவதால், இது தொடர்பான அதிகாரப் பூர்வ அரசாணை விரைவில் வெளியாகலாம் என அப்பகுதி மக்கள் மிகுந்த எதிர்பார்ப்புடன் இருக்கின்றனர்.

# இரவு நேரத்தில் தொடர் மின்வெட்டு; திருவள்ளூரில் மக்கள் திடீர் சாலை மறியல் போராட்டம்

## 2 மணி நேரம் போக்குவரத்து பாதிப்பு

திருவள்ளூர், ஜூன்.15–
இரவு நேர தொடர் மின்வெட்டு கண்டித்து திருவள்ளூர் திருத்தணி சாலையில் கிராம மக்கள் திடீர் மறியலில் ஈடுபட்டதால் 2 மணி நேரம் போக்குவரத்து பாதிப்பும் பரபரப்பும் நிலவியது. திருவள்ளூர் அடுத்த சிறுவனூர் மற்றும் சிறுவனூர் கண்டிகை பகுதிகளில் 500க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் வசிக் கின்றனர். இந்த பகுதிகளில் கடந்த 10 தினங்களாக இரவு நேரங்களில் தொடர் மின்வெட்டு ஏற்பட்டு வந்தது. இதுகுறித்து மின்வாரிய அதிகாரிகளிடம் புகார் தெரிவித்தும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. தொடர்ந்து 10 நாட்களுக்கும் மேலாக இந்த நிலை தொடர்கிறது.



இந்நிலையில் நேற்று இரவும் 1 மணி நேரத்திற்கு மேலாக மின்சாரம் வரவில்லை. இதனால் ஆத்திரமடைந்த அந்த பகுதியை இளைஞர்கள் மற்றும் பொதுமக்கள் 100க்கும் மேற்பட்டோர் திருவள்ளூர் திருத்தணி தேசிய நெடுஞ்சாலையில் திரண்டனர். திடீரென சாலையில் அமர்ந்து மறியலில் ஈடுபட்டனர். இதுகுறித்து தகவலறிந்ததும் திருவள்ளூர் தாலுகா போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து மறியலில் ஈடுபட்ட பொதுமக்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினர். அப்போது அவர்கள், மின்சாரத்தை உடனே சரி செய்தால்தான் சாலை மரியாதை கைவிடுவோம் என கூறினர்.

இதனை தொடர்ந்து போலீசார், மின்வாரிய ஊழியர்களை சம்பவ இடத்துக்கு வரவைத்து ஒரு மணி நேரத்திற்கு பிறகு மின்சாரம் சரி செய்யப்பட்டு விநியோகம் செய்யப்பட்டது.

இதையடுத்து மறியலை கைவிட்டு அனைவரும் கலைந்து சென்றனர். தொடர் மின்வெட்டு காரணமாக திருவள்ளூர் திருத்தணி தேசிய நெடுஞ் சாலையில் மக்கள் மறியலில் ஈடுபட்ட சம்பவத்தால் 2 மணி நேரம் போக்குவரத்து பாதிப்பும், பரபரப்பும் நிலவியது.

# கும்பகோணத்தை தனி மாவட்டமாக விரைவில் முதல்வர் அறிவிப்பார்: வேளாண் அமைச்சர்

கும்பகோணம், ஜூன்.15–
தமிழக முதல்வர் கும்பகோணத்தை தனி மாவட்டமாக விரைவில் அறிவிப்பார் என வேளாண் அமைச்சர் வினோத் தெரிவித்தார்.



கும்பகோணத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட வேளாண் துறை அமை ச்சர் வினோத் செய்தியாளர்களிடம் பேசுகையில், "2028ல் நடைபெற உள்ள மாசி மகாமக விழா தொடர்பாக அறநிலைத் துறை அமைச்சருடன் ஆலோசனை நடத்தி வருகின்றோம்.

இந்த விழாவுக்கு சுமார் 50 லட்சம் பக்தர்கள் வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் பல்வேறு திட்டங்கள் தேவையான வசதிகளை தற்போது தயாரித்து வருகிறோம்.

கும்பகோணத்தை தனி மாவட்டமாக அறிவிப்பதற்கான முயற்சி மேற்கொண்டு வருகிறோம். தமிழக முதல்வர் கும்பகோணத்தை தனி மாவட்டமாக விரைவில் அறிவிப்பார்.

நிறைவடையாத சுற்றுச்சாலையை குறித்து ஏராளமானோர் என்னிடம் மனு அளித்துள்ளனர். கடந்த ஆட்சி காலத்தில் என்னென்ன பிரச்சினை இருக்கின்றது என ஆய்வு மேற்கொள்ள அறிவித்துள்ளோம். மீதமுள்ள சுற்றுச்சாலை பகுதியும் விரைவில் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்," என்றார் அவர்.

# 'ராகிங் என்ஜாய்புல்' அமைச்சர் அருண்ராஜ் பேச்சால் சர்ச்சை

சேலம், ஜூன்.15–
சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக்கல்லூரி 31வது இளங்கலை மாணவர்களுக்கான மருத்துவப் பட்டமளிப்பு விழா நேற்று நடந்தது. மருத்துவம், மருத்துவக்கல்வி மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் அருண்ராஜ், 98 மாணவ, மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கி பேசியதாவது: மருத்துவம் ஒரு தொழிலாக மாறிவிட்டதை மறுக்க முடியாது. நீட் தேர்வு இருக்க கூடாது, ஒரே நாடு ஒரே தேர்தல் போன்றவற்றிற்கு எதிராகத்தான் இருக்கிறோம். ஆட்சிக்கு வருவதற்கு முன்பும், வந்தபிறகும் நீட் தேர்வை எதிர்க்கிறோம்.மருத்துவம்

ஆனாலும் மாணவர்கள் நீட் தேர்வுக்கான பயிற்சி மேற்கொள்வது அவசியமானது. அரசு மருத்துவமனைகள் தரமானதாக இல்லை என்பதை மறுக்க முடியாது. நான் சென்னை மருத்துவக்கல்லூரியில் மருத்துவம் படித்தேன். அந்த நாட்களை மறக்க முடியாது. ராகிங் அனுபவம் மகிழ்ச்சியாக இருக்கும். 1997 காலக்கட்டத்தில் அண்ணாமலை பல்கலைக்கழக மாணவர் நாவரசு கொலை செய்யப்பட்டபிறகு ராகிங்கை அரசு தடை செய்தது. உடனடியாக 90 சதவீதம் நின்றுவிட்டது. அதேநேரத்தில் ராகிங் என்ஜாய்புல்லா இருக்கும். சீனியர் மாணவர்கள், நமக்கொரு அடிமை கிடைத்து விட்டான் என நினைத்து, ரெக்கார்டு எழுத சொல்வார்கள், டிக்கெட் புக் செய்யச் சொல்வார்கள். சோப்பு வாங்கி வர சொல்வார்கள், ஓட்டலுக்கு சென்று சாப்பாடு வாங்கி வருமாறு கூறுவார்கள். அது ஒரு என்ஜாயாக இருக்கும். இவ்வாறு அவர் பேசினார். அமைச்சரே ராகிங் காலக்கட்டங்கள் மகிழ்ச்சியாக இருந்தது என கூறியது பரபரப்பை ஏற்படுத்தியது.

# தமிழகம் முழுவதும் நடைபெற்ற தேசிய லோக் அதாலத்தில் ஒரே நாளில் 91,369 நிலுவை வழக்குகளுக்கு தீர்வு

சென்னை, ஜூன்.15–
தமிழகம் முழுவதும் நடைதில் 91,369 நிலுவை வழக்கு பெற்ற தேசிய லோக் அதாலத்களுக்கு ஒரே நாளில் தீர்வு காணப்பட்டு, பாதிக்கப்பட்டவர்களுக்கு ரூ.664.47 கோடி இழப்பீடாக வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.




பொதுமக்களின் நீண்ட கால வழக்குகளுக்கு விரைவாகவும், கட்டணமின்றியும் தீர்வு காணும் நோக்கில் மாநில சட்டப் பணிகள் ஆணைக்குழு சார்பில் தேசிய லோக் அதாலத் தமிழகம் முழுவதும் நேற்று நடைபெற்றது. மாநில சட்டப் பணிகள் ஆணைக் குழு தலைவரும். உயர் நீதி மன்ற தலைமை நீதிபதியுமான எஸ்.ஏ.தர்மாதிகாரி அறிவுறுத்தலின்படி நடத்தப்பட்ட இந்த லோக் அதாலத்தில் சென்னை உயர் நீதிமன்றத்தில் 5 அமர்வுகளும், உயர் நீதிமன்ற மதுரை கிளையில் 3 அமர்வுகளும் ஏற் படுத்தப்பட்டு நிலுவை வழக்குகள் விசாரிக்கப்பட்டன.

சென்னை உயர் நீதிமன்றத்தில் நீதிபதிகள் பி.வேல் முருகன், பி.டி.ஆஷா, என்.செந்தில் குமார், ஜி.அருள் முருகன் மற்றும் முன்னாள் நீதிபதி பி.கோகுல் தாஸ் ஆகியோர் தலைமையிலும், உயர் நீதிமன்ற மதுரை கிளையில் நீதிபதிகள் பி.பி.பாலாஜி, பி.வடமலை, பி.தனபால் ஆகியோரது தலை மையிலும் நிலுவை வழக்குகள் விசாரிக்கப் பட்டன. இதேபோல மாவட்ட மற்றும் தாலுகா அளவில் மொத்தம் 506 அமர்வுகள் ஏற்படுத் தப்பட்டு மொத்தம் 91,369 நிலுவை வழக்குகளுக்கு நேற்று ஒரே நாளில் தீர்வு காணப்பட்டன.

இதன் மூலம் மொத்தம் ரூ.664 கோடியே 47 லட்சத்து 21 ஆயிரத்து 308க்கான காசோலைகள் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடாக வழங்கப் பட்டன. மாநிலம் முழுவதும் நடைபெற்ற இந்த லோக்அதாலத் ஏற்பாடுகளை மாநில சட்டப் பணிகள் ஆணைக் குழு உறுப்பினர் செயலரும், மாவட்ட நீதிபதியுமான எஸ்.பாலகிருஷ்ணன் தலைமையில் அந்தந்த மாவட்ட நீதிபதிகள் செய்திருந்தனர்.

இதன் ஒரு பகுதியாக, சென்னை மாநகர சிவில் நீதிமன்றத்தில் நடைபெற்ற லோக் அதாலத்தில், உயர் நீதிமன்ற நீதிபதியும் மாநில சட்டப் பணிகள் ஆணைக்குழு உறுப்பினருமான ஏ.டி.ஜெகதீஷ் சந்திரா, தீர்வு காணப்பட்ட வழக்குகளில் பயனாளிகளுக்கு இழப்பீட்டு தொகைக்கான காசோலைகளை வழங்கினார்.

# "மின்வெட்டை நீக்க போர்க்கால நடவடிக்கை தேவை" செந்தில் பாலாஜி

சென்னை, ஜூன்.15–
"இன்ஸ்டா இன்ஃப்ளூயன்ஸர்களுக்கு கண்டண்ட் கொடுக்கும் வேலையை செய்யாமல், நள்ளிரவில் போராடும் மக்களின் துயர் துடைக்க மின்வெட்டை நீக்க போர்க்கால நடவடிக்கை எடுக்க வேண்டும்" என முன்னாள் மின்துறை அமைச்சர் வி.செந்தில் பாலாஜி வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "மாற்றத்தைத் தருகிறேன்" என்று சொல்லி மக்களை ஏமாற்றி வாக்குகளைப் பெற்ற தவெக அரசு தனது ஒரு மாத கால ஆட்சியில் வாக்களித்த மக்களுக்கு பெரும் ஏமாற்றத்தையே தந்திருக்கிறது. 6 மணி நேரம், 12 மணி நேரம் மின்வெட்டு என தாங்கமுடியாத துயரத்தில் நள்ளிரவிலும் பொதுமக்கள் நடுத் தெருவிற்கும், சாலைகளுக்கும் வந்து போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

"சாலை மறியல் இல்லாத இரவுகள் இல்லை" என்ற நிலை மாநிலத்தின் தலைநகரிலும், மற்ற பகுதிகளிலும் இந்த ஆட்சியின் நிர்வாக அவலத்தை வீதிக்கு கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறது.

"பதவியேற்றவுடன் மாற்றத்தைத் தருவேன்" என்ற பஞ்ச் டயலாக் பேசிய முதலமைச்சர் மவுனமாக இருக்கிறார். மின் வெட்டுக்குப் பதிலும் சொல்வதில்லை.

பத்திரிகையாளர்களையும் சந்திப்பது இல்லை. பொறுப்பாக பதில்சொல்ல வேண்டிய மின்துறை அமைச்சரோ தினம் ஒரு Conspiracy theory எழுதி அதை ஊடகங்களிடம் ஒப்பாரி வைத்துக் கொண்டிருக்கிறார். தங்கள் நிர்வாகத் திறமையின்மையை மறைக்க "Fake Reels" போடுவது போல் தினமும் திசை திருப்பும் வேலையை மட்டும் செய்கிறார்.

"ஃபியூஸ் கேரியரை திருடுகிறார்கள்" என்று சொல்லி ஒரு சிசிடிவி கேமரா வீடியோவை பதிவிடுகிறார் அமைச்சர். பகலில் நடக்கும் திருட்டுக்கு இரவில் எப்படி மின் தடை ஏற்படுகிறது? என்று சாதாரண பாமரனுக்கும் கேள்வி எழும் என்பதை அமைச்சர் யோசிக்கவில்லையா? ஃபியூஸ் திருடு போனால் மொத்தமாக தானே மின்சாரம் போக வேண்டும்? விட்டுவிட்டு போவது எப்படி? பிரச்சினையைதீர்ப்பதற்குப் பதில் அமைச்சர் கதை அளக்கிறார்.

கஷ்டப்படும் மக்கள் காதில் பூ சுத்துகிறார். அடுத்து "ஹார்ட் டிஸ்க்குகள் மாயம்" என்றார்.காவல்துறையே விசாரித்து அப்படி காணாமல் போன "ஹார்ட் டிஸ்க்குகளில்" முக்கியத் தகவல்கள் ஏதும் இல்லை என்று கூறிவிட்டது. "ஹார்ட் டிஸ்க்" திருட்டுக்கும் "கரன்ட் கட்டுக்கும்" என்ன சம்பந்தம்? மூன்றாவதாக "மின்வாரியப் பணியாளர்கள் சதி செய்கிறார்கள்" எப்பொழுதும் அர்ப் பணிப்புடன் களத்தில் நிற்கும் தனது பணியாளர்கள் மீதே பழி போட்டார்.

மக்களும் குழந்தைகளும் துன்பத்தில் இருப்பதை ரசிக்க மின் துறை பணியாளர்கள் என்ன அவர்களின் தலைவர் போன்றவர்கள் என்று நினைக்கிறாரா அமைச்சர்? தன் கையாலாகத்தனத்தை வெளிச்சம் போட்டுக் காட்டகரன்ட் கட் காரணம் குறித்து இப்படியா கப்சா விடுவது?



தவெக ஆட்சியில் ஏற்பட்டுள்ள மாற்றம்" மின்வெட்டால் பள்ளிக்கு விடுமுறை விடும்"அவலம் தான்! தங்கள் பயிர்கள் தண்ணீர் இன்றி காய்வதால் விவசாயிகள் போராடும் துயரம்தான்! பத்திரிக்கையாளர்களை பார்த்தவுடன் பவர் கட்குறித்து அமைச்சர் சொல்லும் காரணங்கள் எல்லாமே இந்த தவெக அரசு சீரான மின்சாரத்தை அளிக்க முடியாமல் திணருகிறது என்பதுதான்!

ஆனால் எதனால் மின்வெட்டு நடக்கிறது? என்பதுபற்றி அதிகாரிகளை வைத்து அமைச்சரோ, அமைச்சரை வைத்து முதலமைச்சரோ ஒரு ரிவ்யூ மீட்டிங்காவது நடத்தியிருக்கிறார்களா? இல்லை! எதுவுமே இல்லை! இதுவும் தவெக ஆட்சியில்நடத்துள்ள மாற்றம்தான்! ஒரே மாதத்தில் மின்வாரியத்தில் ஏற்பட்டுள்ள படு மோசமான நிர்வாக தோல்வி இந்த ஆட்சியின் மாற்றம்தான்!

தமிழ்நாட்டின் மின் தேவை ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்து வருகிறது என்பது எந்த அரசும் உணர வேண்டிய உண்மை. அதிகரித்து வரும் தேவைக்கு ஏற்ப திறமையாக நிர்வகித்து மக்களை இன்னலுக்கு உட்படாமல் காப்பதுதான் ஆட்சியின் நிர்வாகத் திறமை. அதைத்தான் எங்கள் தலைவர் தலைமையிலானதிராவிட மாடல் அரசு செய்தது. புள்ளி விவரங்களுடன் சொல்ல வேண்டுமென்றால்,2021ல் அதிகபட்ச உச்சமாக 16,481 மெகாவாட் மின்சாரம் தேவைப்பட்டது. 2022ல் 17,196மெகாவாட், 2023ல் 18,053 மெகாவாட், 2024ல் 19,049, 2025ல் 20,148 மெகாவாட், 2026 ஏப்ரலில் 20,974 மெகாவாட் உச்சத்தைத் தொட்டிருக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் மின் தேவை அதிகரித்தாலும், திராவிட மாடல் ஆட்சி இருந்தவரை சீரான மின்சாரத்தை பொதுமக்களுக்கு வழங்கியிருக்கிறோம்.

சென்னையைப் பொருத்தவரை கடந்த ஆண்டு மின்தேவை 4,663 மெகாவாட் உச்சத்தைத் தொட்டது. 2024ல் 4,769 மெகாவாட் உச்சத்தைத் தொட்டது. அப்படி இருந்தாலும் மின்வெட்டு எங்குமே நடக்கவில்லை. பொதுமக்கள் நள்ளிரவில் கைக்குழந்தைகளுடன், வயதானவர்களுடன், நோயாளிகளுடன் தெருவுக்கு வந்து போராடும் நிலை ஏற்படவில்லை. அது மட்டுமா? இந்தியாவிலேயே மிக குறைவான மின்வெட்டு கொண்ட மாநிலம் தமிழ்நாடு. வளர்ந்த நாடுகளுக்கு இணையான சேவையை வழங்குகிறது என்று ஒன்றிய அமைச்சரே தமிழ்நாட்டைப் பாராட்டினார்.

கடந்த 5 ஆண்டுகால திராவிட மாடல் ஆட்சியில் 2 இலட்சம் விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்பு வழங்கி தடையில்லா மின்சாரம் கொடுத்தோம். நாங்கள் ஆட்சிப் பொறுப்பிற்கு வருவதற்கு முன்பு வருவாய்க்கும், செலவினத்திற்கும் இடையே இருந்த இடைவெளியை 5000 கோடி ரூபாயாகக் குறைத்தது திராவிட மாடல் ஆட்சி.

எண்ணற்ற மின் உற்பத்திக்கான திட்டங்கள், துணை மின் நிலையம், மின் வழித்தடம், மின்மாற்றிகள் அமைத்தல் என பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டது. 90,000 மின்மாற்றிகள் புதியதாகவும், பழுதடைந்த மின்மாற்றிகளை மாற்றியும் மின்வாரியத்தின் நிர்வாகம் சீரமைக்கப்பட்டது திராவிட மாடல் ஆட்சியில்தான்!

ஆகவே, நிர்வாகம் தெரியாமல் மற்றவர்கள் மீது பழி போடுவதற்கே "பத்திரிக்கையாளர் சந்திப்பை" பயன்படுத்துவதை மின்துறை அமைச்சர் கைவிட்டு, மின்வெட்டு பிரச்சனையை தீர்த்து பொதுமக்கள் இரவில் நிம்மதியாக உறங்க, பள்ளிக்கூடங்கள் மூடாமல் இருக்க, விவசாயிகள் வேதனைக் கண்ணீர் வடிக்காமல் இருக்க த.வெ.க அரசுஇனியாவது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இன்ஸ்டா இன்ஃப்ளூயன்ஸர்களுக்கு கண்டண்ட் கொடுக்கும் வேலையை செய்யாமல், ரியலாக நிர்வாகம் செய்ய முயல வேண்டும். மு.க.ஸ்டாலின் சொன்னது போல "பலரை சில காலம் ஏமாற்றலாம்; சிலரைப் பல காலம் ஏமாற்றலாம். ஆனால், எல்லோரையும் எல்லாக் காலமும் ஏமாற்ற முடியாது" என்பதை மின்வெட்டை தடுப்பது எப்படி எனத் தெரியாமல் தத்தளிக்கும் மின்துறை அமைச்சரும், இப்படியொரு திறமையற்ற அமைச்சரை நியமித்து மக்களை சொல்லொனாத் துயரத்திற்கு ஆளாக்கியிருக்கும் முதல்வரும் "ரீல்ஸை" மறந்து "ரியாலிட்டிக்கு" வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்," எனத் தெரிவித்துள்ளார்.

# தங்க காயின் தருவதாக ரூ.20 கோடி மோசடி; ராயபுரம் பெண் இன்ஸ்பெக்டர் சஸ்பெண்ட்

## வடக்கு மண்டல இணை ஆணையர் அதிரடி

சென்னை, ஜூன்.15–
தங்க காயின் தருவதாக ரூ.20 கோடி மோசடி செய்த வழக்கில், ராயபுரம் பெண் இன்ஸ்பெக்டரை சஸ்பெண்ட் செய்து வடக்கு மண்டல இணை ஆணையர் உத்திரவிட்டுள்ளார். இதுதொடர்பாக இன்ஸ்பெக்டரின் டிரைவர் கைது செய்யப்பட்டார். ராயபுரம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணியாற்றி வந்தவர் ஷீலா மேரி. இவர், கடந்த 3 வருடத்திற்கு முன்பு திருவொற்றியூர் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் பணியாற்றினார். அப்போது இவர், விலை குறைவாக ஒரு கிராம் தங்கம் தருவதாக ஆசை வார்த்தை கூறி 100க்கும் மேற்பட்ட போலீசார் மற்றும் அவர்களது குடும்பத்தினரிடம் ரூ.20 கோடி வரை ஏமாற்றியுள்ளார். இந்த விவகாரம் காவல்துறையினர் மத்தியில் சலசலப்பையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியது.




இதுதொடர்பாக பல காவல்துறையினர் புகார் கொடுக்காமல் இருந்தனர். ஒரு சில காவல்துறையினர் கோடிக்கணக்கில் பணம் கொடுத்து ஏமாந்ததால், பொருளாதார குற்றப்பிரிவு அலுவலகத்தில் புகார் அளித்தனர். புகாரின் அடிப்படையில், பெண் ஆய்வாளரின் கார் டிரைவர் பிரபு மணி என்பவரை குற்றப்பிரிவு அதிகாரிகள் கைது செய்தனர். இவர், கொடுங்கையூர் பகுதியில் அலுவலகம் வைத்துள்ளார். இவரை நம்பி பணம் கொடுத்து முதலில் தங்க காயின் வாங்கி உள்ளனர். ஆசை அதிகமானதால் தங்க காயின் வாங்க அதிகளவில் பணம் கொடுத்துள்ளனர். ஆனால், பிரபுமணி தங்க காயின் கொடுக்காமல் ஏமாற்றி வந்துள்ளார். ஒரு கட்டத்தில் அலுவலகத்தை மூடிவிட்டு தலைமறைவானார். தங்க காயின் திட்டத்தில் பல போலீஸ் குடும்பத்தினர் சேரவும், பிரபுமணிக்கு உடந்தையாகவும் பெண் ஆய்வாளர் ஷீலா மேரி இருந்துள்ளார். இதன் மூலம் அவருக்கு பிரபு மணி கமிஷன் கொடுத்துள்ளார். இந்த பணத்தில் பிரமாண்ட திருமண மண்டபம், கல்குவாரி ஆகியவற்றை வாங்கியதாக விசாரணையில் தெரியவந் துள்ளது.

இந்நிலையில் பிரபு மணிக்கு உடந்தையாக செயல்பட்டதாக பெண் ஆய்வாளர் ஷீலா மேரியிடம் விசாரணை நடத்தி வருகின்றனர். மேலும் உயர் அதிகாரிகளின் ஒப்புதல் பெற்று ஆய்வாளரை கைது செய்ய இருப்பதாகவும் கூறப்பட்டது. இதனிடையே, சென்னை வடக்கு மண்டல இணை ஆணையர் மனோகரன் உத்தரவின் பேரில், நூற்றுக்கும் மேற்பட்ட போலீஸ் மற்றும் அவர்களது குடும்பத்தினரை ஏமாற்றிய வழக்கில் ராயபுரம் பெண் காவல் ஆய்வாளர் ஷீலா மேரி நேற்று பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

# ‘ஓன் கோல்’ அடித்து பின்னடைந்த பராகுவே அமெரிக்க அணிக்கு பெரிய வெற்றி



லாஸ் ஏஞ்சல்ஸின் சோஃபி ஸ்டேடியத்தில் நடைபெற்ற ஃபிபா 2026 கால்பந்து உலகக்கோப்பையின் பிரிவு டி ஆட்டத்தில் யு.எஸ்.ஏ அணி பராகுவே அணியை 41 என்ற கோல்கள் கணக்கில் அடித்து நொறுக்கியது.

ஆட்டத்தின் 7வது நிமிடத்தில் பராகுவே பெனால்டி பகுதிக்குள் பந்தைக் கொண்டு வந்து நெருக்கடி கொடுத்தது அமெரிக்க அணி. அந்த நெருக்கடியைச் சமாளிக்கும் எத்தனத்தில் பராகுவே வீரர் டேமியன் போபடில்லா பந்தை கோல்கீப்பருக்கு அடிக்கிறேன் பேர் வழி என்று தன் கோலுக்குள்ளேயே தள்ளி விட அமெரிக்க அணி 1–0 என்று முன்னிலை பெற்றது.

அதன் பிறகு 31 மற்றும் 45வது நிமிடங்களில் அமெரிக்க அணி ஃபோலாரின் பாலோகன் 2 கோல்களை அடித்தார். ஆட்டம் முடியும் தறுவாயில் அதாவது 90 நிமிடங்கள் சென்று இஞ்ஜூரி நேரத்தில் கியோவானி ரெய்னா 4வது கோலை அடிக்க, 73வது நிமிடத்தில் பராகுவே வீரர் மாவ்ரிஷியோ ஒரு கோலை அடித்தார்.

பராகுவே வீரர்களை நிறுத்திய விதமும் தடுப்பு உத்திகளில் கோட்டை விட்டதும் தோல்விக்குப் பெரும் காரணமாயின. முதல் கோலை அமெரிக்காவுக்காக போட்டுத் தந்தவுடனேயே தடுப்பு உத்தியுடன் கூடிய அட்டாக்கிங் ஆட்டத்தை பராகுவே செலுத்தத் தவறியது.

போட்டி தொடங்கிய ஏழாவது நிமிடத்திலேயே அமெரிக்கா முன்னிலை பெற்றது. அமெரிக்க வீரர் வெஸ்டன் மெக்கென்னி வழங்கிய கட்பேக் பந்தை தடுக்க முயன்ற பாராகுவே நடுகள வீரர் டேமியன் போபடில்லா தவறுதலாக தனது சொந்த வலையில் பந்தை செலுத்தினார். இதன் மூலம் அமெரிக்கா 1– 0 என முன்னிலை பெற்றது.

ஆரம்ப கோலால் உற்சாகமடைந்த அமெரிக்கா தொடர்ந்து தாக்குதல் ஆட்டத்தை வெளிப்படுத்தியது. பாராகுவே பாதுகாப்பு அமெரிக்காவின் வேகமான தாக்குதல்களை சமாளிக்கத் தவறிய நிலையில், ஃபோலரின் பாலோகன் முதல் பாதியிலேயே இரண்டு கோல்களை அடித்து அணியின் முன்னிலையை அதிகரித்தார்.

பாலோகன் அடித்த ஒரு கோல் ஆஃப்சைடு காரணமாக நிராகரிக்கப்பட்ட சில நிமிடங்களுக்குப் பிறகு, அவர் மீண்டும் வாய்ப்பைப் பெற்றபோது தவறவிடவில்லை. கிறிஸ்டியன் புலிசிக் இடது பக்கத்தில் இருந்து வழங்கிய துல்லியமான பாஸை கோலாக மாற்றி அமெரிக்காவுக்கு முன்னிலை அதிகரித்தார்.

முதல் பாதி கூடுதல் நேரத்தில் அமெரிக்கா தனது மூன்றாவது கோலையும் பதிவு செய்தது. போட்டியின் சிறந்த வீரர்களில் ஒருவராகத் திகழ்ந்த மாலிக் டில்மன், பாலோகனுக்கு சிறப்பான பாஸை வழங்கினார். அதனைத் தொடர்ந்து 24 வயதான பாலோகன், இரண்டு பராகுவே பாதுகாப்பு வீரர்களை சமாளித்து, பந்தை தனது இடது காலுக்கு மாற்றி, கோலின் மேல் மூலையை நோக்கி அற்புதமாக அடித்தார். பராகுவே கோல்கீப்பர் ஓர்லாண்டோ கில்லால் அதைத் தடுக்க முடியவில்லை.

2 கோல்களை அற்புதமாக அடித்த பாலோகன் யார்?

நியூயார்க் நகரின் ப்ரூக்ளினில் நைஜீரிய பெற்றோருக்கு பிறந்த பாலோகன், பிறந்த ஒரு மாதத்திற்குப் பிறகு இங்கிலாந்துக்கு குடிபெயர்ந்தார். லண்டனில் வளர்ந்த அவர், எட்டு வயதில் ஆர்செனல் அகாடமியில் சேர்ந்தார். இங்கிலாந்து இளைஞர் அணிகளுக்காக விளையாடியதுடன், அமெரிக்கா அண்டர் 18 அணியையும் பிரதிநிதித்துவப்படுத்தியுள்ளார்.

இந்தப் போட்டியின் மூலம் அமெரிக்க அணியின் முதன்மை ஸ்டிரைக்கராக பாலோகன் தனது இடத்தை மேலும் உறுதிப்படுத்தினார். நீண்ட காலமாக திறமையான முன்னணி தாக்குதல் வீரரைத் தேடி வந்த அமெரிக்காவுக்கு அவர் நம்பிக்கைக்குரிய வீரராக உருவெடுத்துள்ளார்.

போட்டியின் 73வது நிமிடத்தில், பராகுவே அணியின் பிரேசில் வம்சாவளியைச் சேர்ந்த மிட்ஃபீல்டர் மௌரிசியோ, பெனால்டி பகுதியின் இடது பக்கத்தில் கிடைத்த இடைவெளியை பயன்படுத்தி ஒரு கோலை அடித்து அணியின் பின்தங்கலைக் குறைத்தார்.

எனினும், கூடுதல் நேரத்தின் இறுதியில் அமெரிக்கா மீண்டும் மூன்று கோல்கள் வித்தியாசத்தை எட்டியது. மாற்று வீரராக களமிறங்கிய ஜியோவன்னி ரெய்னா, தனது வலது காலின் வெளிப்புற பகுதியால் அற்புதமாக வளைத்து அடித்த ஷாட்டின் மூலம் கோல் பதிவு செய்து அமெரிக்காவின் வெற்றியை முத்திரை குத்தினார்.

சனிக்கிழமை நள்ளிரவு (இந்திய நேரப்படி ஞாயிறு காலை) நடைபெறவுள்ள துருக்கி ஆஸ்திரேலியா போட்டிக்கு முன்னதாக, அமெரிக்கா தற்காலிகமாக ‘குரூப் டி’ (Group D) பிரிவில் முதலிடத்தைப் பிடித்துள்ளது.




# ஆஸ்திரேலிய ஓபன் அரை இறுதியில் பி.வி.சிந்து

ஆஸ்திரேலிய ஓபன் பாட்மிண்டன் தொடரின் இந்தியாவின் பி.வி.சிந்து அரை இறுதி சுற்றுக்கு முன்னேறினார்.

ஆஸ்திரேலியாவின் சிட்னி நகரில் நடைபெற்று வரும் இந்தத் தொடரில் மகளிர் ஒற்றையர் பிரிவு கால் இறுதி சுற்றில் ஒலிம்பிக்கில் 2 முறை பதக்கம் வென்ற இந்தியாவின் பி.வி.சிந்து, சீன தைபேவின் சென் சு யுவை எதிர்த்து விளையாடினார்.

ஒருதரப்பு ஆட்டமாக வெறும் 27 நிமிடங்களில் முடிவுக்கு இந்த மோதலில் சிந்து 21–6, 21–9 என்ற நேர் செட்டில் வெற்றி பெற்று அரை இறுதிக்கு முன்னேறினார். அரை இறுதி சுற்றில் சிந்து, போட்டித் தரவரிசையில் முதலிடத்தில் உள்ள ஜப்பானின் அகானே யமகுச்சியுடன் மோதுகிறார். அகானே யமகுச்சி கால் இறுதி சுற்றில் 21–14, 21–14 என்ற செட் கணக்கில் இந்தியாவின் தன்வி சர்மாவை வீழ்த்தினார். இந்த ஆட்டம் 32 நிமிடங்கள் நடைபெற்றது.



# தொடக்க போட்டியில் 3 சிவப்பு அட்டை

பிஃபா உலகக் கோப்பை கால்பந்து தொடரில் நேற்று மெக்சிகோ தென் ஆப்பிரிக்கா அணிகள் மோதின. போட்டியின் இரண்டாவது பாதியில் 49வது நிமிடத்தில் மெக்சிகோ வீரர் பிரையன் குட்டிரெஸ் பந்துடன் முன்னேற முயன்ற போது தென் ஆப்பிரிக்க வீரர் ஸ்பெபெலோ சித்தோல், அவரை முரட்டுத்தனமாக ஃபவுல் செய்தார்.

இதன் காரணமாக சித்தோலுக்கு களநடுவர் நேரடியாக சிவப்பு அட்டை வழங்கினார். இதனால் தென் ஆப்பிரிக்க அணி 10 வீரர்களுடன் விளையாடியது. தொடர்ந்து 84வது நிமிடத்தில் தென் ஆப்பிரிக்க வீரர் தெம்பா ஸ்வானே, மெக்சிகோ வீரர் ரொபர்ட்டோ ஆல்வராடோவின் முகத்தில் தாக்கினார்.

வீடியோ அசிஸ்டண்ட் ரெஃப்ரி (விஏஆர்) மூலமாக ஆய்வு செய்த நடுவர் தெம்பா ஸ்வானேக்கு சிவப்பு அட்டை வழங்கினார். இதனால் தென் ஆப்பிரிக்க அணி 9 வீரர்களுடன் விளையாட வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டது.

இதையடுத்து காயங்களுக்கான இழப்பீடு நேரத்தில் 90+2வது நிமிடத்தில்தென் ஆப்பிரிக்காவின் ஆபத்தான பதில் தாக்குதலைத் தடுப்பதற்காக, அந்த அணியின் வீரர் குலிசோ முதாவை மெக்சிகோ அணியின் தடுப்பாட்டக்காரர் சீசர் மான்டெஸ் ஃபவுல் செய்து கீழே தள்ளினார். இதனால் சீசர் மான்டெஸுக்கு சிவப்பு அட்டை காட்டப்பட்டது.

உலகக் கோப்பை கால்பந்து தொடரின் வரலாற்றில் முதல் போட்டியிலேயே 3 சிவப்பு அட்டைகள் வழங்கப்பட்டது இதுவே முதன் முறையாகும். கடந்த 2022ம் ஆண்டு நடைபெற்ற கத்தார் உலகக் கோப்பை முழுவதும் 4 சிவப்பு அட்டைகள் மட்டுமே வழங்கப்பட்டு இருந்தன.

இந்நிலையில் தற்போது முதல் ஆட்டத்திலேயே 3 சிவப்பு அட்டைகள் கொடுக்கப்பட்டுள்ளன. அதிகபட்சமாக 2006ம் ஆண்டு போர்ச்சுகல் நெதர்லாந்து அணிகள் மோதிய ஆட்டத்தில் 4 சிவப்பு அட்டைகள் வழங்கப்பட்டிருந்தன.தென் ஆப்பிரிக்க வீரர் தெம்பா ஸ்வானேக்கு சிவப்பு அட்டை காண்பித்த நடுவர் வில்டன் சம்பாயோ.

# ஆப்கானிஸ்தானுக்கு எதிராக சரித்திரம் படைப்பாரா கே.எல்.ராகுல்? 3வது வீரர் என்ற பெருமை அடைய வாய்ப்பு




ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் இந்தியாவின் விக்கெட் கீப்பர் பேட்டராக கே.எல்.ராகுல் செயல்பட்டு வருகிறார். ஆப்கானிஸ்தானுக்கு எதிரான வரவிருக்கும் ஒருநாள் தொடரில், விக்கெட் கீப்பர்பேட்டராக 2,000 ஒருநாள் ரன்களை பூர்த்தி செய்வதற்கான சிறந்த வாய்ப்பு அவரைத் தேடிவந்துள்ளது.

ஒருநாள் போட்டிகளில் விக்கெட் கீப்பர்பேட்டராக 2,000 ரன்களை எட்ட கே.எல்.ராகுலுக்கு இன்னும் 105 ரன்கள் மட்டுமே தேவைப்படுகின்றன.கடந்த சில காலமாக ஒருநாள் போட்டிகளில் இந்தியாவின் விக்கெட் கீப்பர்பேட்டராக செயல்பட்டு வரும் கர்நாடகாவைச் சேர்ந்த 34 வயதான வலதுகை பேட்டரான கே.எல்.ராகுல், ஆப்கானிஸ்தானுக்கு எதிரான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரிலும் விக்கெட் கீப்பராக களம் காணத் தயாராக உள்ளார்.

இந்தியா மற்றும் ஆப்கானிஸ்தான் அணிகளுக்கு இடையே ஜூன் 13 அன்று தர்மசாலாவில் தொடங்கவுள்ள முதலாவது இருதரப்பு ஒருநாள் தொடரின் போது, ராகுல் சாதனை புத்தகத்தில் தனது பெயரைப் பதிவு செய்வதற்கான அருமையான வாய்ப்பைப் பெற்றுள்ளார். ஆப்கானிஸ்தானுக்கு எதிரான இந்த மூன்று போட்டிகள் கொண்ட தொடரில் ராகுல் குறைந்தபட்சம் 105 ரன்கள் எடுத்தால், ஒருநாள் கிரிக்கெட்டில் விக்கெட் கீப்பர் பேட்டராக 2,000 அல்லது அதற்கு மேற்பட்ட ரன்களை எடுத்த ராகுல் டிராவிட் மற்றும் எம்.எஸ்.தோனிக்கு அடுத்தபடியாக மூன்றாவது இந்தியர் என்ற சாதனையைப் படைப்பார்.

இந்த மைல்கல்லை எட்டிய முதல் இந்திய வீரர் ராகுல் டிராவிட் ஆவார். அவர் 1999 முதல் 2004 வரை இந்தியாவின் விக்கெட் கீப்பர்பேட்டராக 73 ஒருநாள் போட்டிகளில் விளையாடி 2,300 ரன்கள் எடுத்தார். அதே நேரத்தில், எம்.எஸ்.தோனி 2004 முதல் 2019 வரை இந்தியாவின் விக்கெட் கீப்பராக 347 ஒருநாள் போட்டிகளில் விளையாடி 10,599 ரன்களைக் குவித்துள்ளார்.

கே.எல்.ராகுல் தற்போது விக்கெட் கீப்பர் பேட்டராக விளையாடிய 54 ஒருநாள் போட்டிகளின் 48 இன்னிங்ஸ்களில் 1,895 ரன்கள் எடுத்துள்ளார். மேலும் அவர் இந்த பொறுப்பில் குறைந்தபட்சம் 10 ஒருநாள் இன்னிங்ஸ்களில் விளையாடிய அனைத்து வீரர்களிலும் 57.42 என்ற பேட்டிங் சராசரியுடன் உலகளவில் மூன்றாவது இடத்தில் உள்ளார்

.சர்வதேச ஒருநாள் போட்டிகளில் விக்கெட் கீப்பர் பேட்டராக அதிக ரன்கள் குவித்த உலக சாதனையை இலங்கையின் முன்னாள் கேப்டன் குமார் சங்கக்கார தன் வசம் வைத்துள்ளார். சங்கக்கார 2000 முதல் 2015 வரை இலங்கை அணிக்காக விக்கெட் கீப்பர்பேட்டராக 360 ஒருநாள் போட்டிகளில் விளையாடி 13,341 ரன்களைக் குவித்துள்ளார்.

விக்கெட் கீப்பர் பேட்டர்களில் அதிக ஒருநாள் ரன்களை எடுத்தவர்களின் பட்டியலில் சங்கக்காரவிற்கு அடுத்தபடியாக இந்தியாவின் எம்.எஸ்.தோனி உள்ளார். தோனி விக்கெட் கீப்பராக விளையாடிய 350 ஒருநாள் போட்டிகளில் (இந்தியாவுக்காக 347 போட்டிகள் மற்றும் ஆசிய லெவன் அணிக்காக 3 போட்டிகள் உட்பட) மொத்தம் 10,773 ரன்கள் எடுத்துள்ளார். உலகளவில் ஒருநாள் போட்டிகளில் 10,000க்கும் அதிகமான ரன்களைக் குவித்த ஒரே விக்கெட் கீப்பர்பேட்டர்கள் சங்கக்கார மற்றும் தோனி ஆகிய இருவர் மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கது.

# ஹைதி அணியின் சீருடையில் சர்ச்சை



உலகக் கோப்பை கால்பந்துப் போட்டியில் பங்கேற்றுள்ள ஹைதி கால்பந்து அணி வீரர்களின் சீருடையில் அந்நாட்டின் சுதந்திரப் போர் தொடர்பான படம் இடம்பெற்றிருந்தது.

இதற்கு உலக கால்பந்து சம்மேளனம் (பிஃபா) ஆட்சேபம் தெரிவித்ததால் சட்டையிலிருந்த புகைப்படம் நீக்கப்பட்டுள்ளது. உலகக் கோப்பை கால்பந்துப் போட்டி நேற்று அமெரிக்கா, கனடா, மெக்ஸிகோ ஆகிய 3 நாடுகளில் தொடங்கியது. இந்தப் போட்டியில் பங்கேற்க கரீபியன் நாடுகளில் ஒன்றான ஹைதியும் தகுதி பெற்றுள்ளது.

ஹைதி வீரர்கள் அணிந்திருந்த சட்டையில், ஹைதி நாட்டின் சுதந்திரப் போர் தொடர்பான புகைப்படம் இடம்பெற்றிருந்தது. இது பிஃபாவின் விதிகளை மீறிய செயல் என்று ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து சட்டையிலிருந்த புகைப்படத்தை நீக்கிவிட்டு புதிய சட்டை தயாரிக்கப்பட்டு வீரர்களுக்கு வழங்கப்பட்டது.

ஹைதி வீரர்களுக்கு கொலம்பியாவைச் சேர்ந்த விளையாட்டு உபகரணங்கள், சட்டை, கால் சட்டைகள் தயாரிக்கும் நிறுவனமான சயேட்டா நிறுவனம் தயாரித்துள்ளது. இதுதொடர்பாக சயேட்டா வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறும்போது, “ஹைதி வீரர்களுக்கான கால்பந்து சீருடையை, ஹைதி கால்பந்து சம்மேளனத்துடன் இணைந்து உருவாக்கினோம்.

ஹைதி மக்களின் பெருமை, மன உறுதி மற்றும் மனப்பான்மை ஆகியவற்றை கொண்டாடும் விதமாக தயாரிக்கப்பட்டது. இதற்கு பிஃபா ஆட்சேபம் தெரிவித்ததால் அதை மாற்றி விட்டோம்” என்று கூறப்பட்டுள்ளது.

# வெற்றியுடன் தொடங்கியது மெக்சிகோ அணி



23வது பிஃபா உலகக் கோப்பை கால்பந்து திருவிழா நேற்று நள்ளிரவு மெக்சிகோவில் கோலாகலமாக தொடங்கியது. மெக்சிகோ சிட்டியில் உள்ள அஸ்டெகா மைதானத்தில் நடைபெற்ற தொடக்க ஆட்டத்தில் மெக்சிகோ தென் ஆப்பிரிக்கா அணிகள் மோதின.

9வது நிமிடத்தில் தென் ஆப்பிரிக்கா தங்களுக்குத் தாங்களே பெரும் சிக்கலை ஏற்படுத்திக் கொண்டது. கோல் கீப்பர் ரான்வென் வில்லியம்ஸிடம் பந்து செல்ல அவர், அதை ஸ்பெபெலோ சித்தோலுக்கு பாஸ் செய்தார். ஆனால் சித்தோல் பந்தை சரியாகக் கட்டுப்படுத்தத் தவறியதால் மெக்சிகோ வீரர் எரிக்லிரா பந்தைப் தட்டிப் பறித்தார்.

பின்னர் எரிக் லிரா தட்டிவிட்ட பந்தை பெற்ற ஜூலியன் குயினோன்ஸ், கோல்கீப்பரின் கால்களுக்கு இடையே புகுத்தி வலைக்குள் தள்ளினார். இதனால் மெக்சிகோ 1–0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.இந்த கோல் காரணமாக முதல் பாதியில் மெக்சிகோ 1–0 என முன்னிலையில் இருந்தது. 67வது நிமிடத்தில் மெக்சிகோ அணியின் ரோபர்ட்டோ ஆல்வராடோ கொடுத்த அருமையான கிராஸை பெற்ற ரவுல் ஜிமெனெஸ் தனது அசாத்திய திறமையால் தலையால் முட்டி கோல் அடித்தார்.

இதனால் மெக்சிகோ அணி 2–0 என முன்னிலை பெற்றது. கடைசி வரை போராடிய போதிலும் தென் ஆப்பிரிக்க அணியால் பதில் கோல் அடிக்க முடியாமல் போனது. முடிவில் மெக்சிகோ 2–0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று முழுமையாக 3 புள்ளிகளை பெற்றது. மெக்சிகோ அணி தனது அடுத்த ஆட்டத்தில் தென் கொரியாவுடன் 19ம் தேதி மோதுகிறது. அதே நாளில் நடைபெறும் மற்றொரு ஆட்டத்தில் தென் ஆப்பிரிக்கா, செக் குடியரசு அணியை எதிர்கொள்கிறது.

46வது கோல்

உலகக் கோப்பை கால்பந்து தொடரில் தென் ஆப்பிரிக்காவுக்கு எதிரான ஆட்டத்தில் மெக்சிகோவின் ரவுல் ஜிமெனெஸ் கோல் அடித்தார். சர்வதேச போட்டிகளில் அவர், அடித்த 46வது கோலாக இது அமைந்தது. இதன் வாயிலாக மெக்சிகோ அணிக்காக அதிக கோல்கள் அடித்த வீரர்களின் பட்டியலில் 2வது இடத்தை ஜாரெட் போர்கெட்டியுடன் ரவுல் ஜிமெனெஸ் பகிர்ந்து கொண்டார். இந்த பட்டியலில் 52 கோல்களை அடித்து ஜேவியர் சிச்சாரிட்டோ ஹெர்னாண்டஸ் தொடர்ந்து முதலிடத்தில் உள்ளார்.

இன்றைய ஆட்டங்கள்

கத்தார் சுவிட்சர்லாந்து , நேரம்: அதிகாலை 12:30

பிரேசில் மொராக்கோ , அதிகாலை: 3:30

ஹைதி ஸ்காட்லாந்து, நேரம்: காலை 6:30

ஆஸ்திரேலியா துருக்கி, நேரம்: காலை 9:30

ஜெர்மனி குராசாவோ, நேரம்: காலை 10:30

# ரிஷப் பண்ட் இந்த வீரரை பார்த்து பாடம் கற்கனும்.. மனதை விட்டு விடாதீர்கள்.. இர்பான் பதான் கருத்து

2027 ஆம் ஆண்டு ஆப்பிரிக்காவில் நடைபெறவுள்ள ஒருநாள் உலகக் கோப்பைக்கான இந்திய அணி தங்களது ஆரம்ப கட்ட பணிகளை தொடங்கிவிட்டது. தர்மசாலாவில் சனிக்கிழமை தொடங்கும் ஆப்கானிஸ்தானுக்கு எதிரான மூன்று போட்டிகள் கொண்ட தொடருடன் ஆரம்பமாகின்றன. இரு அணிகளும் இதற்கு முன்பு பல்வேறு தொடர்களில் மோதியிருந்தாலும், இருதரப்பு ஒருநாள் தொடரில் நேருக்கு நேர் மோதுவது இதுவே முதல் முறையாகும்.

சுப்மன் கில் தலைமையில் களம் இறங்கும் இந்திய அணி, விராட் கோலி மற்றும் ஹர்திக் பாண்டியா (ஆகிய முக்கிய வீரர்கள் காயம் காரணமாக இல்லாத நிலையிலும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தத் தயாராகி வருகிறது. இவர்களின் காயம் மற்ற இளம் வீரர்களுக்கு தங்களை நிரூபிக்க ஒரு நல்ல வாய்ப்பாக அமைந்துள்ளது. விக்கெட் கீப்பர் தேர்வு குறித்து பதான் கருத்து இந்தத் தொடரில் இஷான் கிஷன் மீது கூடுதல் கவனம் இருக்கும். 2023 உலகக் கோப்பைக்குப் பிறகு ஒருநாள் போட்டிகளில் விளையாடாத அவர், கே.எல்.ராகுலுக்கு அடுத்தபடியாக மாற்று விக்கெட் கீப்பராக தனது இடத்தை உறுதிப்படுத்த முயற்சிப்பார். தற்போதைக்கு தேர்வுக்குழுவினர் கிஷன் மீது நம்பிக்கை வைத்துள்ள நிலையில், சஞ்சு சாம்சனையும் பரிசீலிக்க வேண்டும் என்று இர்பான் பதான் தெரிவித்துள்ளார்.

“ஒருநாள் போட்டிகளில் கே.எல்.ராகுல் தான் இந்தியாவின் முதல் தேர்வு விக்கெட் கீப்பர்பேட்ஸ்மேன். அவர் 5 மற்றும் 6 ஆகிய வரிசைகளில் சிறப்பாகச் செயல்பட்டுள்ளார். பேட்டிங் வரிசையில் எந்த இடத்திலும் விளையாடக்கூடிய அவரது இந்த திறன் அணிக்குப் பலம் சேர்க்கிறது” என்று பதான் தெரிவித்துள்ளார். மாற்று விக்கெட் கீப்பராக இஷான் கிஷனைத் தேர்வு செய்தது புத்திசாலித்தனமான முடிவு என்றும், மூன்றாவது இடத்தில் சஞ்சு சாம்சன் பரிசீலிக்கப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். “ரிஷப் பண்ட் நம்பிக்கையை இழக்கக் கூடாது” ஒரு காலத்தில் இந்தியாவின் மூன்று வடிவ கிரிக்கெட்டிலும் தவிர்க்க முடியாத வீரராகக் கருதப்பட்ட ரிஷப் பண்ட், சமீபகாலமாக டி20 மற்றும் ஒருநாள் போட்டிகளில் இருந்து பின்னுக்குத் தள்ளப்பட்டுள்ளார். அவர் ஒருநாள் போட்டியில் விளையாடி ஏறத்தாழ இரண்டு ஆண்டுகள் ஆகின்றன.

ஆனாலும், பண்ட்டை இப்போதே ஓரங்கட்டிவிடக் கூடாது என்று பதான் தேர்வுக்குழுவினரைக் கேட்டுக்கொண்டுள்ளார். உள்நாட்டுப் போட்டிகளில் சிறப்பாக விளையாடி மீண்டும் இந்திய அணிக்குள் நுழைந்த இஷான் கிஷனை உதாரணமாக எடுத்துக்கொண்டு பண்ட் செயல்பட வேண்டும் என்று அவர் அறிவுறுத்தியுள்ளார். “ரிஷப் பண்ட்டை முற்றிலும் புறக்கணித்துவிடாதீர்கள் என்று நான் தேர்வுக்குழுவினருக்கு அறிவுறுத்துகிறேன். வெள்ளைப் பந்து கிரிக்கெட்டில் அவரது சமீபத்திய செயல்பாடுகள் சிறப்பாக இல்லை என்பது உண்மைதான். ஆனால் இஷான் கிஷனைப் பாருங்கள். அவர் அணியில் இல்லாதபோது அதை ஒரு உந்துதலாக எடுத்துக்கொண்டு, உள்நாட்டுப் போட்டிகளில் சிறப்பாக விளையாடி, ஜார்கண்ட் அணியை சையத் முஷ்டாக் அலி கோப்பை வெற்றிக்கு வழிநடத்தினார்” என்று பதான் கூறினார். ரிஷப் பண்ட், இஷானிடமிருந்து உத்வேகம் பெற்று தொடர்ந்து கடினமாக உழைக்க வேண்டும் என்றும், வெள்ளைப் பந்து கிரிக்கெட்டில் மீண்டும் திரும்புவதற்கான நம்பிக்கையை அவர் இழக்கக் கூடாது என்றும் பதான் மேலும் வலியுறுத்தியுள்ளார்.

தற்போது அணியில் இடம் பெறாவிட்டாலும், பண்ட் தொடர்ந்து தேர்வுக்குழுவினரின் கண்காணிப்பில் தான் உள்ளார். கடந்த ஆண்டு சாம்பியன்ஸ் டிராபி மற்றும் இந்த ஆண்டின் தொடக்கத்தில் நியூசிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடர்களில் அவர் தேர்வு செய்யப்பட்டிருந்தாலும், காயம் மற்றும் ஆட்ட வாய்ப்பு கிடைக்காத காரணங்களால் விளையாட வில்லை என்பது குறிப்பிடத்தக்கது.






# உலக கொழுப்பு கல்லீரல் விழிப்புணர்வு தினம்: புதிய சிகிச்சை மையம் தொடக்கம்!

வேலூர், ஜூன்.15-

உலக கொழுப்பு கல்லீரல் விழிப்புணர்வு தினத்தை (Global Fatty Liver Day 2026) முன்னிட்டு, ஜூன் 12 ஆம் தேதி வெள்ளிக்கிழமையன்று 'கொழுப்பு கல்லீரல் சிகிச்சை மையம்' (Fatty Liver Clinic) சிறப்பாகத் தொடங்கி வைக்கப்பட்டது.

ஸ்ரீ சக்தி அம்மாவின் தெய்வீக அருளாசியுடன் நடைபெற்ற இந்நிகழ்வை, ஸ்ரீ நாராயணி குழும நிறுவனங்களின் இயக்குநரும் அறங்காவலருமான பேராசிரியர் என். பாலாஜி குத்துவிளக்கேற்றி முறைப்படி தொடங்கி வைத்தார். சிறப்பு விருந்தினர்கள் பங்கேற்பு

இவ்விழாவில் தமிழக அரசின் கைத்தறி, துணிநூல் மற்றும் கதர் துறை அமைச்சர் எம். விஜய் பாலாஜி சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்பித்தார். மேலும், இந்நிகழ்வில்:சட்டமன்ற உறுப்பினர்கள்பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள்மருத்துவக் கண்காணிப்பாளர் டாக்டர் கீதா இனியன் துணை மருத்துவக் கண்காணிப்பாளர் டாக்டர் சக்திவேலன்டிவைன் க்ஃபே மற்றும் ஸ்ரீ சுகி ஃபார்மா குழும நிறுவனங்களின் இயக்குநர்கள் ஸ்ரீநாத் மற்றும் ஸ்ரீகாந்த்உள்ளிட்ட பல முக்கிய பிரமுகர்கள் பங்கேற்று விழாவைச் சிறப்பித்தனர்.விழிப்புணர்வு மற்றும் மருத்துவச் சேவைஇச்சிறப்பு நிகழ்வில், இரைப்பை மற்றும் குடல் நோய் சிகிச்சைத் துறையின் (Gastroenterology Department) ஆலோசகர்கள், துறைத் தலைவர்கள், மருத்துவர்கள் மற்றும் பணியாளர்கள் திரளாகக் கலந்துகொண்டனர். அவர்கள் பொதுமக்களிடையே கொழுப்பு கல்லீரல் நோய் குறித்த விழிப்புணர்வை பரப்புவதன் முக்கியத்துவத்தை வலியு றுத்தினர்.பொதுமக்களின் ஆரோக்கிய மேம்பாட்டிற்கும், தரமான மருத்துவச் சேவைகளை வழங்குவதற்கும் இந்த புதிய கொழுப்பு கல்லீரல் சிகிச்சை மையம் ஒரு சிறந்த மைல்கல்லாக அமையும் என விழாக் குழுவினர் தெரிவித்தனர்.

# நீலகிரி மாவட்டத்தில் புதிய அம்மா உணவகங்கள் அமைக்க தமிழக முதலமைச்சருக்குமனு

## பொதுச்செயலாளர் சிவசுப்பிரமணியம் தமிழக முதலமைச்சருக்கு மனு அனுப்பியுள்ளார்

நீலகிரி, ஜூன்.15-

நீலகிரி மாவட்டத்தில் புதிய அம்மா உணவகங்களை அமைத்தல், தற்போதுள்ள அம்மா உணவகங்களை மேம்படுத்துதல் மற்றும் பணியாளர்களின் நலன் சார்ந்த பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, கூடலூர் நுகர்வோர் மனிதவள சுற்று ச்சூழல் பாதுகாப்பு மையத்தின் பொதுச்செயலாளர் சிவசுப்பிரமணியம் தமிழக முதலமைச்சருக்கு மனு அனுப்பியுள்ளார்.அவர் அனுப்பியுள்ள மனுவில் கூறியிருப்பதாவது:நீலகிரி மாவட்டத்தில் உதகை, குன்னூர், கூடலூர் மற்றும் பந்தலூர் பகுதிகளில் செயல்பட்டு வரும் அம்மா உணவகங்கள் ஏழை எளிய மக்கள், தினக்கூலித் தொழிலாளர்கள், நோயாளிகள் மற்றும் அவர்களது உறவினர்களுக்கு பெரும் உதவியாக இருந்து வருகின்றன.தற்போதைய தேவையை கருத்தில் கொண்டு, கோத்தகிரி நகராட்சிப் பகுதியாக தரம் உயர்த்தப்பட்டுள்ள நிலையில், கோத்தகிரி அரசு மருத்துவமனை மற்றும் பேருந்து நிலையத்தை ஒட்டிய பகுதியில் புதிய அம்மா உணவகம் அமைக்க வேண்டும். மேலும், உதகை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகத்திலும், கூடலூர் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை வளாகத்திலும் அம்மா உணவகங்கள் இல்லாததால், நோயாளிகள் மற்றும் அவர்களது உறவினர்கள் உணவு தேவைக்காக கடும் சிரமத்தை எதிர்கொள்கின்றனர். எனவே, இவ்விரு மருத்துவமனை வளாகங்களிலும் புதிய அம்மா உணவகங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.தற்போது செயல்பட்டு வரும் அம்மா உணவகங்களில் பழுதடைந்துள்ள கேஸ் அடுப்புகள், சமையல் பாத்திரங்கள் மற்றும் மாவு அரைக்கும் இயந்திரங்களை அகற்றி, புதிய நவீன உபகரணங்களை வழங்க வேண்டும். மேலும், அனைத்து அம்மா உணவகங்களிலும் புதிய குடிநீர் சுத்திகரிப்பு கருவிகள் நிறுவி பாதுகாப்பான குடிநீர் மற்றும் சூடான நீர் வசதி ஏற்படுத்த வேண்டும். வயதானவர்கள், குழந்தைகள் மற்றும் நோயாளிகள் அமர்ந்து உணவருந்தும் வகையில் சிமெண்ட் இருக்கைகள் அமைக்கப்பட வேண்டும். அத்துடன், புதிய குடிநீர் டம்ளர்கள், நவீன கைகழுவும் வசதிகள் உள்ளிட்ட சுகாதார உபகரணங்களை வழங்குவதோடு, அம்மா உணவகங்களில் பணிபுரியும் பெண் தொழிலாளர்களுக்கு தரமான சீருடைகள், கையுறைகள், தலைக்கவசங்கள் மற்றும் ஏப்ரன்கள் உள்ளிட்ட பாதுகாப்பு உபகரணங்களும் வழங்கப்பட வேண்டும். நீலகிரி மாவட்டத்தின் மலைப்பகுதி மற்றும் பொருளாதாரச் சூழலை கருத்தில் கொண்டு, பொதுமக்களின் நலனை உறுதிப்படுத்தும் வகையில் மேற்கண்ட கோரிக்கைகளை தமிழக அரசு விரைந்து நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என சிவசுப்பிரமணியம் தனது மனுவில் வலியுறுத்தியுள்ளார்.

# பொதுமக்களுக்கு நோய் தொற்று ஏற்படும் அபாயம்: மாங்குளத்தில் தேங்கிக்கிடக்கும் குப்பைகளை அகற்ற எம்.எல்.ஏவிடம் கிராம மக்கள் கோரிக்கை!

மானாமதுரை, ஜூன்.15-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை கிழக்கு ஒன்றியத்திற்குட்பட்ட மாங்குளம் பஞ்சாயத்து, தாயமங்கலம் செல்லும் வழியில் குப்பைக் கழிவுகள் அளவுக்கு அதிகமாகத் தேங்கிக் கிடப்பதால் அப்பகுதியில் கடுமையான சுகாதாரச் சீர்கேடு ஏற்பட்டுள்ளது.



அரசு முறைப்படி குப்பைகளைக் கொட்டுவதற்கென ஒதுக்கிய இடத்தை விடுத்து, சாலையோரங்களிலும் அதைத் தாண்டிய பகுதிகளிலும் விதிகளை மீறி குப்பைகள் கொட்டப்பட்டு வருகின்றன. இதனால் அப்பகுதி முழுவதும் துர்நாற்றம் வீசுவதோடு, பொதுமக்களுக்கும், அவ்வழியே செல்பவர்களுக்கும் தொற்றுநோய்கள் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது. நிர்வாகிகள் நேரில் ஆய்வுஇது குறித்து தகவலறிந்த மானாமதுரை கிழக்கு ஒன்றிய இணைச் செயலாளர் ரி. கண்ணன் மற்றும் ஒன்றிய துணைச் செயலாளர் அருண் சசி ஆகியோர் சம்பவ இடத்திற்கு நேரில் சென்று தேங்கிக் கிடக்கும் குப்பைக் கழிவுகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.சட்டமன்ற உறுப்பினருக்குக் கோரிக்கை

இதனையடுத்து, மாங்குளம் கிராம பொதுமக்கள், இந்தச் சுகாதாரச் சீர்கேட்டைக் கருத்தில் கொண்டு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் D. இளங்கோவன் (MLA) விடம் கோரிக்கை விடுத்துள்ளனர். பொதுமக்களின் நலன் கருதி, தேங்கியுள்ள குப்பைக் கழிவுகளை விரைந்து அகற்றி, அப்பகுதியைச் சுத்தப்படுத்தத் தேவையான தகுந்த நடவடிக்கைகளைச் சட்டமன்ற உறுப்பினர் எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் அவசரக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# தமிழக மக்கள் தொடர்பு அலுவலர்கள் பணியிட மாற்றம்: பல மாவட்டங்களில் புதிய நியமனங்கள்

சென்னை, ஜூன்.15-

தமிழக அரசின் தகவல் மற்றும் மக்கள் தொடர்புத் துறையில் பணியாற்றி வரும் மக்கள் தொடர்பு அலுவலர்கள் (PRO) பலர் நிர்வாக காரணங்களுக்காக பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர். அதன்படி, சென்னை கலைவாணர் அரங்க மக்கள் தொடர்பு அலுவலர் கைலை செல்வம் திருநெல்வேலி மாவட்டத்திற்கும், இராமநாதபுரம் மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலர் ஐ. பாண்டி தேனி மாவட்டத்திற்கும் மாற்றப்பட்டுள்ளனர். மதுரை மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலர் சாலி தளபதி இராமநாதபுரம் மாவட்டத்திற்கும், காஞ்சிபுரம் மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலர் ராமச்சந்திர பிரபு சென்னை கலைவாணர் அரங்கத்திற்கும் மாற்றப்பட்டுள்ளனர்.

ஈரோடு மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலர் சுகுமார் திருப்பூர் மாவட்டத்திற்கும், தேனி மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலர் ஏ. எடிசன் ராணிப்பேட்டை மாவட்டத்திற்கும் மாற்றப்பட்டுள்ளனர். கள்ளக்குறிச்சி மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலர் பிரபாகரன் அரியலூர் மாவட்டத்திற்கும், விழுப்புரம் மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலர் சதீஷ்குமார் கள்ளக்குறிச்சி மாவட்டத்திற்கும் மாற்றப்பட்டுள்ளனர். திருவண்ணாமலை மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலர் கே. சரவணன் கடலூர் மாவட்டத்திற்கும், சிவகங்கை மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலர் ராஜா செல்வன் திண்டுக்கல் மாவட்டத்திற்கும் மாற்றப்பட்டுள்ளனர். விருதுநகர் மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலர் வெற்றிவேந்தன் மதுரை மாவட்டத்திற்கும், வேலூர் மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலர் கதிரவன் விழுப்புரம் மாவட்டத்திற்கும் மாற்றப்பட்டுள்ளனர். அரியலூர் மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலர் சுரளி பிரபு திருவண்ணாமலை மாவட்டத்திற்கும், மயிலாடுதுறை மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலர் கார்த்திகேயன் நாகப்பட்டினம் மாவட்டத்திற்கும், நாகப்பட்டினம் மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலர் செல்வக்குமார் மயிலாடுதுறை மாவட்டத்திற்கும் மாற்றப்பட்டுள்ளனர்.இந்த பணியிட மாற்ற உத்தரவால் பல மாவட்டங்களில் மக்கள் தொடர்புத் துறையின் நிர்வாகப் பணிகளில் புதிய மாற்றங்கள் ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.



■ நீலகிரி மாவட்டம், உதகை வளர்ப்பு நாய் பூங்காவில், மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு தலைமையில் ரேபிஸ் நோயினால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து பள்ளி மாணவியர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

# தாம்பரம் எக்ஸ்பிரஸ் ரயில் இன்ஜினில் திடீர் கோளாறு: நீடாமங்கலத்தில் நிறுத்தி வைப்பு பயணிகள் அவதி

திருவாரூர், ஜூன்.15-

தாம்பரம்போடிநாயக்கனூர் எக்ஸ்பிரஸ் ரயில் இன்று அதிகாலை நீடாமங்கலம் வந்த திடீரென இன்ஜினில் கோளாறு ஏற்பட்டதால் நீடாமங்கலத்தில் 2 மணி நிறுத்தப்பட்டது. இதனால் அதிலிருந்த 500க்கும் மேற்பட்ட பயணிகள் அவதிக்குள்ளாகினர். திருவாரூர் மாவட்டம் நீடாமங்கலம் ரயில் நிலையம் வழியாக கோவை மன்னார்குடி எக்ஸ்பிரஸ் ரயில், சென்னை மன்னார்குடி ரயில், எர்ணாகுளம் காரைக்கால் ரயில், மன்னார்குடி திருப்பதி ரயில், ஜோத்பூர் மன்னார்குடி ரயில், கோவா வேளாங்கண்ணி ரயில்கள் சென்று வருகிறது.அதேபோல் திருச்சியில் இருந்து வேளாங்கண்ணி, காரைக்கால், மன்னார்குடி செல்லும் ரயில்கள் நீடாமங்கலம் வழியாக செல்கிறது.இதேபோல் சென்னை தாம்பரத்தில் இரவு 10.30 மணிக்கு புறப்படும் போடிநாயக்கனூர் எக்ஸ்பிரஸ் ரயில், மயிலாடுதுறை, திருவாரூர் வழியாக நீடாமங்கலத்தில் நிற்காமல் தஞ்சை வழியாக போடிநாயக்கனூர் சென்று வருகிறது. வழக்கம்போல் தாம்பரம் போடிநாயக்கனூர் எக்ஸ்பிரஸ் ரயில் நேற்றிரவு 10.30 மணிக்கு தாம்பரத் திலிருந்து புறப்பட்டது.இன்று அதிகாலை 4.48 மணியளவில் நீடாமங்கலம் வந்தது. அப்போது ரயில் இன்ஜினில் ஏற்பட்ட திடீர் கோளாறு காரணமாக நீடாமங்கலம் ரயில் நிலையத்தில் அந்த ரயில் நிறுத்தப்பட்டது. பின்னர் தஞ்சையில் இருந்து ரயில்வே தொழில்நுட்ப வல்லுனர்கள் வரவழைக்கப்பட்டு கோளாறு சரிசெய்யப்பட்டது. பின்னர் இந்த ரயில் காலை 6.35 மணியளவில் புறப்பட்டு சென்றது. இதனால் 2 மணி நேரம் ரயில் நின்றதால் அதிலிருந்த 500க்கும் மேற்பட்ட பயணிகள் அவதிக்குள்ளாகினர். இதன் காரணமாக கோவையில் இருந்து நீடாமங்கலம் வழியாக மன்னார்குடி செல்லும் செம்மொழி எக்ஸ்பிரஸ் ரயில் ஒரு மணி நேரம் தாமதமாக வந்தது

# நடைமேடைகளில் மீண்டும் இருசக்கர வாகனங்கள் ஆக்கிரமிப்பு: நகராட்சி நிர்வாகத்தின் மெத்தனப் போக்கால் பொதுமக்கள் அவதி

மானாமதுரை, ஜூன் .15-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை நகராட்சி புதிய பேருந்து நிலையத்தில் பொதுமக்கள் நடந்து செல்லும் நடைமேடைகளில் இருசக்கர வாகனங்களை நிறுத்தக்கூடாது என நகராட்சி நிர்வாகம் ஏற்கனவே எச்சரிக்கை விடுத்ததுடன், அபராதம் விதித்தல் மற்றும் வாகனங்களை கைப்பற்றுதல் உள்ளிட்ட நடவடிக்கைகளையும் மேற்கொண்டது.ஆனால், அந்த நடவடிக்கைகளை பொருட்படுத்தாமல் பல வாகன ஓட்டிகள் தொடர்ந்து நடைமேடைகளிலேயே தங்களது இருசக்கர வாகனங்களை நிறுத்திவிட்டு செல்வதாக கூறப்படுகிறது. இதனால் நடைபாதைகள் ஆக்கிரமிக்கப்பட்டு, பொதுமக்கள், முதியோர் மற்றும் பெண்கள் சிரமத்துடன் நடந்து செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.குறிப்பாக, காவல்துறையில் பணியாற்றுபவர்கள் மற்றும் ஓய்வு பெற்ற காவல்துறையினரின் இருசக்கர வாகனங்களும் நடைமேடைகளில் நிறுத்தப்படுவதாக பொதுமக்கள் குற்றம்சாட்டுகின்றனர். விதிமீறல்கள் தொடர்ந்து நடைபெற்று வந்தாலும், அவற்றை தடுக்க நகராட்சி நிர்வாகம் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் போதிய நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.



தொடர்ச்சியான கண்காணிப்பும் கடுமையான நடவடிக்கைகளும் இல்லாததால் விதிமீறல்கள் மீண்டும் அதிகரித்துள்ளதாக பொதுமக்கள் குற்றம்சாட்டுகின்றனர். நகராட்சி நிர்வாகம் மெத்தனப் போக்கை கைவிட்டு, நடைமேடைகளை ஆக்கிரமிக்கும் வாகனங்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுத்து பொதுமக்களின் பாதுகாப்பான நடமாட்டத்தை உறுதி செய்ய வேண்டும் என சமூக ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# சத்தியமங்கலம் பூ மார்க்கெட்டில் மல்லிப்பூ விலை அதிரடியாக உயர்வு!

ஈரோடு, ஜூன்.15-

ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் பூ மார்க்கெட்டில் மல்லிப்பூ விலை அதிரடியாக உயர்ந்துள்ளது. கடந்த நாட்களில் ஒரு கிலோ ரூ.280க்கு விற்பனை செய்யப்பட்ட மல்லிப்பூ, தற்போது கிலோ ரூ.1,050 ஆக அதிகரித்துள்ளது. சத்தியமங்கலம் பகுதியில் பெய்து வரும் தொடர் மழையால் மல்லிகை வரத்து குறைந்துள்ளது. மேலும், அமாவாசை என்பதால் பூக்களின் தேவை அதிகரித்ததே இந்த திடீர் விலை உயர்வுக்குக் காரணமாகும்






Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161